அந்தக் கடிதத்தில் உடனடியாக ஒரு இலட்சம் டன் நிலக்கரி கப்பல் மூலமாக வங்காளம், பீகாரிலிருந்து அனுப்ப வேண்டும் என்று வற்புறுத்தப் பட்டுள்ளது. 10—2—1973-ம் தேதி திரு. மோகன் குமாரமங்கலம் அவர் களுக்கு நிலக்கரி பற்றுக்குறையை எடுத்துக் கூறி நிலக்கரியை அனுப்ப ஏற்பாடு செய்யும்படி நான் ஒரு செய்தி அனுப்பினேன். இத்தனை முயற்சி களும் தொடர்ந்து மாநில அரசும், மின் வாரியமும் எடுத்து வந்திருப்பதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆனால் இந்தத் துறையில் பொறுப்பேற்று இருக்கக் கூடிய திரு. மோகன் குமாரமங்கலம் மத்திய அரசுத் துறைகளில், அதுவும் அவருடைய இலாகாவி லேயே நடைபெற்றிருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றி தெரிந்து கொள்ளாமல் மாநில அரசு எந்த முயற்சியும் எடுக்காதது போல் குறை கூறியிருப்பது விசித்திரமாக இருக்கிறது. இவ்வாறு தவறான கருத்துக்களை வெளியிட்டு அரசியல் நோக்கத்தோடு மத்திய அரசில் உள்ள பொறுப்புள்ள அமைச்சர் ஒருவர் மக்களை அரசியல் லாபத்திற்காக திசை திருப்ப முயற்சிப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். இத்தகைய உண்மைக்குப் புறம்பான பேச்சுக்கள் மத்திய மாநில உறவுகளைப் பாதிக்கும் என்பதை இதன் மூலம் இந்தியத் தலைமை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவது என் கடைமை யாகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக நான் வருந்து கின்றேன்.

(5) அமைச்சரின் அறிக்கை.

பட்டதாரி ஆசிரியர்களின் கிளர்ச்சி குறித்து கல்வி அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை 82-வது விதியின் கீழ் ஓர் அறிக்கையை சமர்ப்பிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பட்டதாரி ஆசிரியர்களில் ஒரு பிரிவினர் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி நேரடிக் கிளர்ச்சியில் ஈடு படப் போவதாகப் பத்திரிகைகளில் அறிவிப்பு வெளியிட்டுள்ளது கண்டு நான் மிகவும் வேதனையடைந்துள்ளேன். மார்ச் மாதம் 5 ஆம் தேதியன்று சென்னையில் தலைமைச் செயலகத்தின் முன்பு மறியல் செய்யப் போவதாகவும், மார்ச் 12-ம் தேதியன்று மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்களின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகவும், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் கண்காணிப்பு வேலையையும், விடைத் தாள்களைத் திருத்தும் வேலையையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

1973 மார்ச் 1] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பட்டதாரி ஆசிரியர்களின் போராட்டக் குழுவினர் முக்கியமாக ஆறு கோரிக்கைகளை வற்புறுத்தக் கிளர்ச்சி நடத்தப் போவதாக அறிவித்துள்ளார்கள்.

பட்டதாரி ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை அரசு ஆதரவுடனும், அனுதாபத்துடனும் பரிசிலனை செய்து வருவதை ஆசிரியர் சமுதாயம் நன்கு அறிவார்கள். அண்மையில் பட்டதாரி ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள் இரண்டாம் ஊதியக் குழு பரிந்துரைத்ததற்கும் கூடுதலாக உயர்த்தப்பட்டுள்ளன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் முதலமைச்சர் அறிவித்துள்ள 10 ரூபாய் அகவிலைப்படி உயர்வு, ஆசிரியர் பெருமக்கள் அனைவருக்கும் உரித்தாகும்.

போராட்டக் குழுவினர் பட்டதாரி ஆசிரியருக்கு அடிப்படைச் சம்பளமாக ரூ. 375-ம், தனிச் சம்பளமாக ரூ. 50-ம் அகவிலைப் படியோடு (இப்பொழுது 50) சேர்த்துத் தரவேண்டும் என்று கோரிக்கை எழுப்பியுள்ளனர். அதாவது, ரூ. 475 எதிர்பார்க்கின்றனர். இதனை நிதி நிலைமையோடும், அதே பட்டதாரி ஆசிரியர் தரத்தில் வைக்கப்பட்டுள்ள மற்ற அரசு அலுவலர்களின் சம்பள விகிதத்தோடும் ஒப்பிடும்போது நடைமுறைக்கு ஒத்து வராத ஒன்று என்பது தெளிவாகப் புலனாகும். பட்டதாரி ஆசிரியருக்குத் தமிழக அரசு கொடுக்கும் ஊதியத்தோடு பிற மாநில அரசுகள் கொடுக்கும் ஊதியத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ் நாட்டின் ஊதியம் கணிசமான அளவுக்கு உயர்ந்திருப்பதைக் காணலாம். சம்பளமும் அகவிலைப் படியும் சேர்த்து அளிக்கப்படும் ஊதியம்.

		ரூபாய்
தமிழ்நாடு	..	350
மைசூர்	..	297
ஆந்திரா	..	221
கேரளா	..	238
பாண்டிச்சேரி	..	233
மகாராட்டிரா	..	279
ஒரிசா	..	307
இராஜஸ்தான்	..	282
உத்தரப்பிரதேசம்	..	243
அசாம்	..	280

		ரூபாய்
பீகார்	..	338
குசராத்	..	294
ஜம்மு-காஷ்மீர்	..	235
மத்தியப் பிரதேசம்	..	274
மேற்கு வங்காளம்	..	255
சந்திகார்	..	322
இமாசலப் பிரதேசம்	..	201
பஞ்சாப்	..	357
டில்லி	..	312
அரியானு	..	366

பஞ்சாப், அரியானு தவிர மற்ற மாநிலங்கள் தமிழ்நாட்டைவிட மிகவும் குறைந்த ஊதியம் வழங்குகின்றன என்பதைக் காணலாம்.

1970-ம் ஆண்டுக்குப் பின் 'பி' பிரிவுப் பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப் பட்ட பி.டி. ஆசிரியர்களை தேர்வாணைக் குழுவைக் கலந்து கொள்ளாமல் வரன் முறைப் படுத்தவேண்டும் என்பது மற்றொரு கோரிக்கை. 'பி' பிரிவுப் பள்ளி களும் இப்பொழுது அரசாங்கப் பள்ளிகளாக நடத்தப்பட்டு வருவதால், அப்பள்ளிகளுக்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை தேர்வாணைக் குழுவிடம் ஒப்படைப்பதுதான் முறையாகும். அந்த விதிகளுக்கு இணங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து அதிருப்தி கொள்ள எந்தவித நியாயமும் இல்லை. தற்காலிக பணிகளில் நியமிக்கப்படுபவர்களை விதிமுறை களின்படி தேர்வு ஆணைக் குழுவினைக் கலக்காமல் நிரந்தரப்படுத்துவது என்பது முறையாகாது. இதே நிலை எல்லாத் துறைகளிலும் வற்புறுத்தப்படுமேயானால் தேர்வாணைக் குழு மதிப்பிழந்த ஒன்ருக கருதப்படும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும். ஏற்கனவே பணியாற்றிவரும் ஆசிரியர்களின் பணிக்கால அனுபவத்தை மனதில் கொண்டு தேர்வாணைக் குழு அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம். நீண்டகாலம் பணியாற்றிய ஆசிரியர்கள் தேர்வாணைக் குழுவினல் தேர்ந்தெடுக்கப்படாத நிலை ஏற்பட்டால் அவர் களுக்கு நிவாரணம் தரும் வகையில் அவர்களை தொடர்ந்து பணியில் அமர்த்து வதற்கான நடவடிக்கைகளை அரசு தேர்வாணைக் குழுவைக் கலந்துகொண்டு மேற்கொள்ளும். ஆகவே, இதுகுறித்து ஆசிரியர்கள் சஞ்சலமடையவோ, கிளர்ச்சி செய்யவோ தேவையில்லை.

1973 மார்ச் 1] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

'ஏ' பிரிவினரும், 'பி' பிரிவினரும் ஒன்றாக இணைக்கப்படவேண்டும் என்பது மற்றொரு கோரிக்கை. முன்பு மாவட்ட வாரியங்களால் நடத்தப்பட்ட பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் 'பி' தொகுதியினராகக் கருதப் படுகின்றனர். இப்பள்ளிகள் அரசினுல் எடுத்துக்கொள்ளப்பட்ட பின், நீண்ட காலம் வரை, இந்த ஆசிரியர்களின் நிலை தெளிவற்றதாய் இருந்ததைச் சீர்படுத்தி, ஆணைகள் வெளியிட்டது இந்த அரசுதான். இந்த ஆசிரியர்கள் தனித் தொகுதியினராகக் கருதப்பட்டு, இவர்களுக்கு தனியாக பாதுகாப்புகள் வழங்கப்படவேண்டும் என்று ஆசிரியர்கள் எழுப்பிய கோரிக்கையின் பெயரில் அரசு 'பி' பிரிவினருக்கு பல சலுகைகள் வழங்கியுள்ளது. இரண்டு பிரிவு களையும் ஒன்றாக இணைக்கவேண்டுமென்ற கோரிக்கை அண்மைக்காலமாக 'பி' பிரிவு ஆசிரியர்களால் வற்புறுத்தப்பட்டு வருகிறது. 'ஏ', 'பி' இரு சாரா ரையும் கலந்து இதுபற்றி ஒரு முடிவு காண கல்வித் துறை நடவடிக்கை எடுத்துவருகிறது.

தேர்வு நிலைப் பதவிகளை பணிக்கால அடிப்படையில் நிறைவு செய்யவேண்டும் என்பது மற்றொரு கோரிக்கை. இக்கோரிக்கையையும் கொள்கை அளவில் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. எத்தனை ஆண்டுகள் பணி யாற்றியவர்களுக்கு இப்பதவிகள் அளிக்கப்படலாம் என்பதை நம்முடைய நிதிநிலைமைகளை மனதில் கொண்டு நிர்ணயம் செய்யவேண்டும். இதுபற்றிய அறிவிப்பை கல்வித் துறை மானியக்கோரிக்கையை நான் அவைமுன் வைக்கும் போது எதிர்பார்க்கலாம்.

தலைமை ஆசிரியர் பதவிகளுக்கு ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதில் இப் பொழுதுள்ள முறையில் மாற்றம் எதுவும் செய்யக்கூடாது என்பது பட்டதாரி ஆசிரியர்களின் மற்றொரு கோரிக்கையாகும். பணிக்கால அடிப்படையில் தங்களுக்கும் தலைமை ஆசிரியர் பதவி அளிக்கப்பட வேண்டுமென்று தமிழாசிரியர்கள் எழுப்பியுள்ள கோரிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், பட்டதாரி ஆசிரியர்களின் இக்கோரிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்று தோன்றுகிறது. விதிமுறைகளில் தலைமை ஆசிரியருக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள தகுதிகளை மனதிற்கொண்டு, தமிழ் ஆசிரியர்களுக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படாத வகையில், இப்பிரச்னைப் பற்றி முடிவு செய்ய இடமுண்டு.

தனியார்ப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் நலன்களைப் பாது காக்க சட்டம் கொண்டு வரவேண்டும் என்பது பட்டதாரி ஆசிரியர்களின் மற்றொரு கோரிக்கை. இக்கோரிக்கை ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது என்பதையும், தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின்

நலனைப் பாதுகாக்கும் வகையில் ஒரு சட்ட வரைவு ஏற்கனவே இம்மன்றத்தில் கொண்டு வரப்பட்டு கூட்டு ஆய்வுக் குழுவின் பரிசிலனையில் உள்ளது என்பதையும், ஆசிரியர்கள் அறிவார்கள். அந்தச் சட்ட வரைவு சட்ட மன்றத்தின் இத்தொடர் கூட்டத்திலேயே கொண்டு வரப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்ட இந்த கோரிக்கையின் மீது கிளர்ச்சி செய்ய நியாயம் எதுவுமில்லை.

பட்டதாரி ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளைப் பற்றி அரசு முனைந்து பரிசிலனை செய்து வருகிறது என்பது நான் மேற்சொன்னவற்றிலிருந்து தெளிவாக விளங்கும். ஆகவே, இக்கோரிக்கைகளை வற்புறுத்த ஆசிரியர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவது அவசியமுமல்ல; விரும்பத்தக்கதுமல்ல. அது அவர்கள் நலனுக்கும் உகந்ததல்ல. மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குத் தங்களை ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்ற இக்கட்டத்தில் ஆசிரியர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவது மாணவர்களின் நலனைப் பெரிதும் பாதிக்கும். மாணவர் சமுதாயமும் பெற்றோர்களும் இது பற்றி விழிப்பாக இருக்க வேண்டும். இவற்றையெல்லாம் மனதிற்கொண்டு பட்டதாரி ஆசிரியர்கள் கிளர்ச்சியில் ஈடுபடும் யோசனையைக் கைவிட்டு, சுமுகமான சூழ்நிலையில் தங்கள் கோரிக்கைகளை, நியாய வாத அடிப்படையில், அதிகாரிகளுடன் கலந்து பேசி, எல்லோர் நலனுக்கும் உகந்த முடிவு எடுக்க வழி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

ஆசிரியர்களின் கோரிக்கைகளை அரசு அனுதாபத்துடன் கவனிக்கின்ற நேரத்தில் கட்டுப்பாட்டுக்கு முன் உதாரணமாக விளங்கவேண்டிய ஆசிரியர்கள் இது போன்ற கிளர்ச்சிகளில் ஈடுபடுவதை அரசு அனுமதிக்க முடியாது என்பதையும் நான் தெளிவாக்க விரும்புகிறேன். நான் நிலைமையைத் தெளிவாக்கிய பின்பும் ஆசிரியர்கள் கிளர்ச்சியில் ஈடுபடுவார்களானால், விதி முறைகளின்படி அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் உறுதியாக எடுக்கப்படும் என்று நான் வேதனையுடன் அறிவிக்க வேண்டிய நிலையில் உள்ளேன்.

1972-ம் வருடம் பிப்ரவரி மாதம் 22-ம் நாள் வெளியிடப்பட்ட கல்வித் துறையின் அரசு ஆணையில் அரசு ஊழியர்களுக்கு வகுக்கப்பட்டுள்ள ஒழுக்க விதிகள் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 1—4—1970 முதல் பொருந்தும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேலை நிறுத்தம், உண்ணா நோன்பு, மறியல் போன்ற கிளர்ச்சிகள் சட்ட விதிகளுக்கு முரண்பட்ட செயல்களாகும். இந்த விதி முறைகள் தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும். மார்ச் 5 ஆம் தேதியன்றும் 12 ஆம் தேதியன்றும் பள்ளிகளுக்குச் செல்லாமல்

சிறு விடுப்பு அனுமதி கோரும் ஆசிரியர்களுக்கு அந்த அனுமதி வழங்கப் படக்கூடாது என்றும், அனுமதியின்றி அவர்கள் பள்ளிகளுக்குச் செல்லாமல் நின்று விட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் எல்லாப் பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது. சட்டத்தை மீறிய கிளர்ச்சிகளில் ஆசிரியர்கள் ஈடுபட்டால், சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிலைமைகளைக் கருத்தில் கொண்டு ஆசிரியப் பெருமக்கள் தங்கள் கிளர்ச்சித் திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று இம்மன்றத்தின் மூலம் நான் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: எழுந்திருந்தார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதிலே ஒன்றும் விளக்கம் கேட்கக்கூடாது.

திரு. என். கே. பழனிசாமி: இம்மாதிரியான ஒரு அறிவிப்பை விடுவதை விட சர்க்கார் நேரடியாக ஆசிரியர்களுக்கு அழைப்பை அனுப்பி, அவர்களை வரச்சொல்லி பேச்சுவார்த்தைகள் நடத்தி, இதை சுமுகமாக முடிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தச் செய்திகளை நான் பத்திரிகைகளிலே பார்த்துத்தான் சொல்கிறேன். இந்த 6 கோரிக்கைகளைப் பற்றி எந்தக் குறிப்பும் இயக்குநருக்கும் வரவில்லை, துறைக்கும் வரவில்லை, எனக்கும் வந்து சேரவில்லை. பத்திரிகைகளில் வந்ததை வைத்துக்கொண்டுதான் இத்தகைய சூழ்நிலை ஏற்படக்கூடாது என்று இப்பொழுதே சொல்கிறேன். அவர்கள் உரிய அதிகாரிகளைக் கலந்து இதைப்பற்றி பேசி சுமுகமாக முடிவு எடுக்க வழி இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறேன். இதைப்பின்பற்றி பள்ளிக் கல்வி இயக்குநரைச் சந்தித்து அவ்வப்போது இதைப்பற்றி விளக்கங் கள் பெறுவதற்குத் தாராளமாக வாய்ப்பு இருக்கிறது. அதையும் நான் இந்த அறிக்கையிலேயே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்.

(3) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(ஆ) பட்டதாரி ஆசிரியர்களின் கிளர்ச்சி குறித்த ஒற்றிவைப்புத் தீர்மானங் களைத் தள்ளிவிட்டு, கல்வி அமைச்சருக்கு விதி 82-ன் கீழ் அதே பொருள் குறித்து அறிக்கை அளிக்க அனுமதி அளித்தது குறித்து.

திரு. க. சுப்பு: பாயிண்டு ஆஃப் ஆர்டர், சார். பேரவைத் துணைத் தலைவர் அவர்களிடம் நான் ஏற்கெனவே இது சம்பந்தமாக ஒரு ஒற்றிவைப்புத்